Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்
EELANATHAM
மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆனி - 08 23-06-2003 திங்கட்கிழமை ஓசை 125

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical

கண் பரிசோதிக்கப்பட்டு முக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்தியத் துண்டுகளுக்கும் கண்ணாடி வழங்கப்படும்



வவுனியா ஒப்டிக்கல், 30 பஸ் நிலையம், வவுனியா.

## சமாதானம் தொடர்பாக தாங்கள் எடுக்கும் எந்த முடிவிற்கும் உறுதுணையாக நிற்போம்

### தேசியத் தலைவருக்கு வடமராட்சி கிழக்கு மக்கள் உறுதியளிப்பு

சமாதானம் தொடர்பாக தாங்கள் எடுக்கவிருக்கும் எந்த முடிவிற்கும் உங்களின் மக்களாகிய நாம் இது வரை காலமும் உறுதுணையாகவும், பக்க பலமாகவும் நின்றதுபோல் தொடர்ந்தும் உங்களுக்குத் தோள் கொடுப்போம் என வடமராட்சி கிழக்கு வாழ் மக்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் உறுதியளித்துள்ளனர்.

தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு வடமராட்சி கிழக்கு வாழ் மக்களின் பணிவான வேண்டுதல் எனக் குறிப்பிடப் பட்டுள்ள அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்களாகிய நாம், கடந்த 14-06-2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் பயணித்த எமது எண்ணெய்க் கப்பலைத் தாக்கி அழி த்து மீண்டும் ஒரு தடவை தனது அராஜகத்தை வெளிப் படுத்திய சிறிலங்காக் கடற்படையின் செயலை வன்மை யாகக் கண்டிப்பதோடு,

(08ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் முஸ்லிம் மக்கள் கலந்துகொள்வர்

### மௌலவி இர்பான் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்விற்கு இராணுவத்தினர் கெடுபிடிகள் புரிந்தாலும் முஸ்லிம் மக்கள் கலந்து கொள்வார்கள் என மௌலவி ஏ. எம். இர்பான் தெரிவித்துள்ளார்.

நேற்று அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவம் இந்நிகழ்விற்கு வருவோர் மீது சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டாலும் அதைப் பொருட்படுத்தாது முஸ்லிங்கள் அனைவரும் கலந்துகொள்வார்கள். இதற்கான வேண்டுதலை நான் முஸ்லிம் சமூகத்தினரிடம் விடுத்துள்

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளிடம் உத்தியோகப் பற்றற்ற தமிழீழத்தை தாரை வார்க்க அரசாங்கம் தயாராகிறது

## சுதந்திரக் கட்சி மாநாட்டில் சந்திரிகா

(கொழும்பு)

**தற்போதைய அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைக் கூடாக உத்தியோகப்பற்றற்ற தமிழீழம் ஒன்றை விடுதலைப்புலிகளுக்கு வழங்க முயற்சித்து வருவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.**



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 14ஆவது தேசிய சம்மேளனக் கூட்டம் நேற்று நிட்டம்புவவில் நடைபெற்ற போது சனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீண்டும் யுத்தத்திற்குத் தயாராகிவருகின்றார்கள் என்பதற்கான நம்பகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றது என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினரும் புலனாய்வுத் துறையினரும் இதனை உறுதிப்படுத்தியிருப்பதாக அவர் கூறியுள்ளார். அத்துடன் தனது தலைமையிலான அரசு விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்ததாக தெரிவித்த அவர் இந்த நடவடிக்கை சகல இன மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இம் மாநாட்டில் நான்கு சிரேஷ்ட உறுப்பினர்களை உப தலைவர்களாக நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய அரசொன்றை நிறுவுவது தொடர்பாகவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசுடன் எந்த வகையிலும் ஒரு உடன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழு அறிக்கை இவ்வாரம் வெளியிடப்படும்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பான இறுதிவிசாரணை அறிக்கை இவ் வாரம் வெளியாகும் என்று போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கப்பல் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கடற்படையினர் மற்றும் கடற்புலிகள் ஆகியோருடன் விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கின்றது என்றும் விசாரணையின் போது புதிய தகவல்கள் கிடைத்திருப்பதாவும் அவர் கூறினார்.

இவற்றைக் கொண்டு கப்பல் தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

## புங்குடுதீவுக் கரையோரத்தில் தலையில்லாத ஆணின் சடலம்!

புங்குடுதீவுக் கடற்கரையில் இனம்தெரியாத ஆணின் சடலம் ஒன்று தலை இல்லாமல் அழுகிய நிலையில் நேற்று கரையொதுங்கியுள்ளது. இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிசார் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் இளைஞர்கள் - யுவதிகள் காணாமற்போவதால் அவ்வாறு காணாமற் போனோரில் ஒருவராக இச்சடலம் இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். (33)

## தற்போதைய சூழலைப் பயன்படுத்தி புலிகள் தம்மைப் பலப்படுத்துகின்றனர்

### முப்படைத் தளபதிகள் சந்திரிகாவிற்கு அறிவிப்பு

தற்போதைய சமாதான நடவடிக்கைகளைப் பயன்படுத்திப் புலிகள் தங்களைப் பலப்படுத்தி வருவதாக சிறிலங்காவின் முப்படைகளின் தளபதிகளும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து படையினரை உசார் நிலையில் இருக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தர

(08ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவின் அனைத்துக் கப்பல்களிலும் கண்காணிப்புக்குழுவினரை அமர்த்த சிறிலங்கா அரசாங்கம் கோரும்

கடற்படையினரின் ரோந்துப் படகுகளில் மட்டுமல்லாது அவர்களது தாய்க்கப்பல்கள் உட்பட அனைத்துக் கப்பல்களிலும் கண்காணிப்புக் குழுவினரை அமர்த்துமாறு அரசு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைக் கோரியுள்ளது.

அத்துடன் எஸ். எல். என். சயுர, எஸ்.எல். என். நந்தமித்ர போன்ற தாய்க் கப்பல்கள் உட்பட அனைத்துப் பீரங்கிப் படகுகளிலும் கண்காணிப்புக் குழுவினரை அமர்த்துமாறு அவர்களைக் கோரவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு கடற்பரப்பிற்கு அப்பால் கடந்த வாரம் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டதையடுத்தே நிலைமைகள் மோசமடைந்ததைத் தடுப்பதற்காக அரசு இவ் ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## மொறகொடவின் பாதுகாப்புக்கு மேலும் 15 கொமாண்டோப்படையினர்

சிறிலங்கா மீள்கட்டமைப்பு பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பாதுகாப்புக்கு மேலதிகமாக பதினைந்து கொமாண்டோப் படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கொழும்பில் உள்ள அவரது வீட்டின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ் குழுக்களுக்கான பாதுகாப்பும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## சிங்களவர் சிங்கள வரலாற்றைக் கற்பதுபோல் நாம் எமது வரலாற்றைக் கற்கவேண்டும்!

### தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

சிங்களவர்கள் சிங்கள வரலாற்றைக் கற்பது போன்று தமிழர்கள் தமிழ் வரலாற்றினையே கற்கவேண்டும் என தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுடைய வரலாறு, பண்பாடு, பூகோள ரீதியாக வாழ்வியல் அடையாளங்கள் அரசாங்க நூல்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. உண்மைகள் மறைக்கப்பட்டு பொய்கள் புனையப்பட்டு எமது எச்சங்கள் மறைக்கப்பட்டுள்ளன. இதனால், அரச நூல்களில் திரிபு படுத்தப்பட்ட தமிழினத்தின் வரலாற்றை ஆதாரங்களுடன் நாம் நிரூபிக்க வேண்டிய நிலை உள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் பிரதேசங்களில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முஸ்லிம் காங்கிரஸ் கோரும்

வடக்கு கிழக்கில் ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முஸ்லிம்கள் பெருமளவில் வாழும் பகுதியில் மூன்று மாதகாலத்துக்குள் நடத்த வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

அடுத்த வாரம் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் நடைபெறும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

## கண்டெடுப்பு

முறிகண்டியில் தேசிய அடையாள அட்டை மற்றும் பயண அனுமதி அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சின்னத்துரை நாகேஸ்வரி (497462878V) வித்தியாலய வீதி, மீசாலை. தற்போதைய முகவரி நாச்சிக்குடா மேற்கு, விசுவமடு. என்பவருடைய அடையாள அட்டையே கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் யாழ். சாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளவும். (பா)

## யாழ். அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் படையினரின் சோதனைகளால் சிரமம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் படையினர் சோதனைச் சாவடியில் தற்போது சோதனைக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சாதாரண சோதனைகளுடன் இப்பாதையூடாக இதுவரை காலமும் மக்கள் பயணத்தினை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் கடந்த சில வாரங்களாக மக்கள் உடற் பரிசோதனைக்கும், ஆள் அடையாள பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் அவர்கள் கொண்டு செல்லும் சகல பொதிகளும் பிரிக்கப்பட்டு துருவித் துருவி சோதனையிடப்படுகின்றது.

வாகனங்களில் செல்வோர் முதியவர், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி இறக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் இப்பாதையூடாகப் பயணங்களை மேற்கொள்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளனர். (33)

## மதுபோதையுடன் அதிவேகமாக வாகனம் செலுத்தியவருக்குத் தண்டனை

(அலுவலக செய்தியாளர்)

மதுபோதையில் அதிவேகமாக ஏ.9 பிரதான வீதியில் கைஏஸ் வாகனத்தைச் செலுத்திச் சென்ற நபர் ஒருவர் தமிழீழக் காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் தடுத்து நிறுத்தி கைது செய்யப்பட்டார். மேற்படி நபர் காவல் துறையினரால் ஒருநாள்தடுத்து வைக் கப்பட்டதுடன் அபராதமும் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருகையில், ஏ-9 வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புக் கடமையில் காவல்துறையினர் ஈடுபட்டிருந்தவேளையில் மேற்படி வீதியால் அதிவேகமாக வந்த வாகனத்தைக் கண்டு அதைத்தடுத்து நிறுத்த முற்படுகையில் மேற்படி வாகனம் நிறுத்துவதில் சந்தேகம் அடைந்த காவல் துறையினர் வாகனச் சாரதியினை வைத்தியரிடம் அழைத்துச் சென்று வைத்திய பரிசோதனைக் குட்படுத்தியபொழுது மேற்படி சாரதி மது போதையில் இருந்தது தெரியவந்துள்ளது.

அதனையடுத்து தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் சாரதியினை காவல் நிலையத்தில் தடுத்து வைத்ததுடன், மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியமைக்காக 1500 ரூபா தண்டம் அறவிடப்பட்டதுடன், மேற்கொண்டு மதுபோதையில் வாகனம் செலுத்தக்கூடாது என அறிவுறுத்தி நேற்று நபரையும், வாகனத்தையும் விடுவித்தனர்.(சோ)

## சாவு அறிவித்தல்



### தம்பையா நிதராமவீரலிங்கம் (சேதுவாத்தியார்)

(ஓய்வுபெற்ற அதிபர்)

அம்பலவன் பொக்கணை முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும், ஓய்வுபெற்ற அதிபரும், பிரபல நாடகக் கலைஞருமான தம்பையா நிதராமவீரலிங்கம் அவர்கள் 20-06-2003 அன்று காலமானார். இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பேரானந்தரூபி (கனடா), பேரானந்தரூபன் (சுவிஸ்), செல்வரூபன், சிவரூபன் (கனடா), யோகனரூபி (யாழ். இராமநாதன் நுண்கலைப்பீட இறுதியாண்டு மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகவேல், ஜெலா ஆகியோரின் மாமனாரும், அபிஷா, அனுஷன், ரிலக்சன், லக்சன் ஆகியோரின் பேரனுமாவார். இவரின் இறுதிக் கிரியைகள் 24-06-2003 (நாளை) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று அம்பலவன்பொக்கணை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்:

நி. செல்வரூபன்

(மகன்)

(3242)

## வவு.வட.ப.நோ.கூ.சங்கம், நெடுங்கேணி

# பதவி வெற்றிடம்

வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் குறிப்பிடும் பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் நிரப்புவதற்காகத் தகைமையுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தெரிவு செய்யப்படுபவர் அந்தந்தப்பதவிக்கேற்ப ரொக்கப்பிணை, ஆதனப்பிணை என்பன செலுத்துதல் வேண்டும். குறித்த பதவிக்கான பதவி நிர்ணயம் கிடைக்கும் வரை 31/97க்கமைய சம்பளம் வழுங்கப்படும். பதவி நிர்ணயம் கிடைத்ததும் 31/99 க்கமையச் சம்பளம் வழங்கப்படுவதுடன் நிலுவைச்சம்பளமும் வழுங்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்கம், நெடுங்கேணி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ 10.07.2003க்கு முன்னர் கிடைக்கப்பெறல் வேண்டும். விண்ணப்பத்தில் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் தெளிவாகவும் சகலவிபரங்களும் உள்ளடக்கப்பட்டு சொந்தக்கையெழுத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். சங்கத் தொழிற்பரப்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

### 1. காசாளர் :- 306/11

சம்பள அளவுத்திட்டம்- 31/99 ன்படி

4500.00 - 90X10 - 100X10 = 6400.00

---

54000.00 - 1080X10 - 1200X10 = 76800.00

**கல்வித்தகைமை:-** அ) கூட்டுறவுப்பணியாளர் 12 ஆவது சம்பள அளவுத் திட்டப்பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப்பணியாளர் 13 ஆவது சம்பள அளவுத்திட்டப்பதவியில் 4வருடங்களுக்குக் குறையாத அனுபவம்:-

- அல்லது.

ஆ) கூட்டுறவுப்பணியாளர் சாதாரணதரப்பரீட்சையில் சித்தி க.பொ.த. (சாதாரணதரத்தில்) கணிதம் /வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம், தமிழ்பாஷை உட்பட 4 திறமைச்சித்தியுடன் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர்/ வியாபார நடவடிக்கைகளில் 2வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

### 2. கிளைமுகாமையாளர்:- 208/13

சம்பள அளவுத்திட்டம்- 31/99 ன்படி

4000.00 - 75X10 - 80X10 = 5550.00

---

48000.00 - 900X10 - 960X10 = 66600.00

**கல்வித்தகைமை:-** 1) க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தமிழ் பாஷை, கணிதம்1/கணிதம்2/ வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இருபாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் மொத்தம் மூன்று பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2) மேற்குறிப்பிட்ட பாடங்களான தமிழ்,கணிதம், வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ. த. சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்1,கணிதம்2, எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெறவேண்டும் என்பதில் இருந்து விலக்களிக்கப்படும்.

### 3. இலிகிதர்:- 302/14

சம்பள அளவுத்திட்டம்- 31/99ன்படி

3750.00 - 70X10 - 75X10 = 5200.00

---

45000.00 - 840X10 - 900X10 = 62400.00

**கல்வித்தகைமை:-** 1) க.பொ.த. சாதாரணதரப்பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.தமிழ் பாஷை, கணிதம்1/கணிதம்2/ வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இருபாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் மொத்தம் மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2) தமிழ்,கணிதம்/ வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்றிருப்பின், க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ்,கணிதம்1,கணிதம்2,வர்த்தக எண்கணிதம், எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்திபெற்றிருக்கவேண்டும் என்பதில் இருந்து விலக்களிக்கப்படும்.

### 4. அலுவலக சேவகர் :- 317/17

சம்பள அளவுத்திட்டம்- 31/99 ன்படி

3000.00 - 55X10 - 60X10 = 4150.00

---

36000.00 - 660X10 - 720X10 = 49800.00

**கல்வித்தகைமை:-** 8ஆம் வகுப்புச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**

(சி-7756)

# ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியே புகலிடம் கோருவோருக்கு தடுப்புமுகாம்!

## பரீட்சிக்க பிரிட்டன், டென்மார்க் முடிவு


ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியே தடுப்பு முகாம்களை அமைத்து அவற்றில் புகலிடம் தேடி வருவோரைத்தங்க வைப்பது எனும் திட்டத்தை, ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கீகாரம் இன்றியே பரீட்சித்துப் பார்ப்பதென பிரிட்டனும் டென்மார்க்கும் தீர்மானித்துள்ளன.

ஆனால், இத்தகைய நடவடிக்கைகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் புகலிடச் சட்டங்களைப் பாதிக்கும் என்றும் ஜேர்மனி, பிரான்ஸ், போன்ற ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளுக்கு அகதிகள் படையெடுப்பை அதிகரிக்கச் செய்துவிடும் என்றும் ஐரோப்பிய ஆணைக்குழுவும் அகதிகள் உரிமைக்குழுவும் எச்சரித்துள்ளன.

அதேபோல், கடந்த வியாழன் கிரேக்கத்தில் ஒன்று கூடிய ஐரோப்பிய ஒன்றியத்தலைவர்கள் இந்த தடுப்பு முகாம் அமைப்பதை நிராகரித்திருந்தனர்.

ஆனால்; இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் சென்றால் ஏனைய நாடுகளும் பின்பற்றுவது உறுதி என டென்மார்க்,பிரிட்டன் கூறியுள்ளன.

இதனை அவுஸ்திரேலியா, நெதர்லாந்தும் ஆதரிக்கின்றன. ஏனெனில் இந்நடவடிக்கை மூலம் ஆசியா, ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த அகதிகளைப் பாதுகாக்க முடியும்எனும் கருத்தும் கூறப்படுகின்றது.



அமெரிக்காவின் அரிசோனா–லெமன் மலையில் பரவிய காட்டுத்தீபலமணித்தியாலங்களாகப் போராடி தீயணைக்கப்பட்டது.

## சீனாவுக்கு 6 நாள் பயணம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நேற்று 06 நாட்கள் பயணமாக சீனா சென்றுள்ளார்.

10ஆண்டுகளில் இந்திய அரசியல் தலைவர் ஒருவர் சீனாவுக்குச் செல்வது இதுவே முதல் தடவையாகும்.

சீனாவுடனான முக்கிய ஒப்பந்தங்கள்பல கைச்சாத்திடப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# சதாம் ஹுசைன் ஈராக்கிற்குள் பிரவேசம்; கண்டுபிடிக்க அமெரிக்கா தீவிர நடவடிக்கை!

## புதிய தகவலால் சிரியா கலக்கம்

**சதாம்ஹுசைனும் அவருடைய இரண்டு புதல்வர்களும் இன்னமும் உயிருடன் இருப்பதாகவும் ஈராக் அமெரிக்கப் படைகளிடம் வீழ்ச்சி கண்டதையடுத்து இவர்கள் மூன்றுபேரும் சிரியாவிற்குத் தப்பிச் சென்று மீண்டும் ஈராக் திரும்பியுள்ளார்கள் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.**

அமெரிக்கப்படையினரால் தேடப்பட்டுவந்த முக்கிய நபரொருவர் கைது செய்யப்பட்டதையடுத்து இந்தத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரிகள் இதுபற்றிக் கூறுகையில்: சதாம்ஹுசைன் அவரது புதல்வர்கள் இருவரையும் தேடிக் கண்டுபிடிப்பதற்கு ஈராக்கில் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்ட சதாமின் முன்னாள் செயலாளர் உண்மைதான் சொல்கின்றார் என்பது நிச்சயமற்றதாகவுள்ளது என்று அமெரிக்க உளவறியும் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கப் பத்திரிகைகள் சதாம் ஹுசைன் அவரது மகன்கள் உயிருடன் இருப்பதாகச் செய்தி வெளியிட்டமையை, அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஹமித் மௌமுட் தாமும், சதாமின் மகன்களும் ஒருகட்டத்தில் சிரியாவிற்குத் தப்பிச் சென்றதாகவும், பின்னர் ஈராக் திரும்பியதாகவும் விசாரணையாளர்களிடம் கூறியுள்ளார்.இதேநேரம் சிரியா அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளது. சாதாம் ஹுசைனுக்கோ அவரது குடும்பத்திற்கோ புகலிடம் அளிக்க் வில்லை என்று கூறியுள்ளது.

# இஸ்ரேலியத் தாக்குதலில் கமாஸ் உறுப்பினர் பலி!

(டெல் அவிவ்)

பலஸ்தீன மேற்குக் கரையில் நேற்று முன்தினம் இஸ்ரேலியப்படையினர் நடத்திய தாக்குதலில் பலஸ்தீன கமாஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் அறிவித்துள்ளது. மேற்குக்கரை கெப்ரோனில் நடத்தபபட்ட இந்தத் தாக்குதலில் அப்துல்லா கபாஸ்னி எனும் பலஸ்தீன கமாஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினரே கொலலப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இஸ்ரேலில் அண்மையில் நடத்தப்பட்ட முக்கிய தாக்குதல்களுக்கு இவரே காரணம் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க சனாதிபதியுடன் முஷாரவ் சந்திப்பு பேச்சின் முடிவிற்காக இந்தியா காத்திருப்பு!

பாகிஸ்தான் பிரதமர் முஷாரவ் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ்சுடன்நாளை அமெரிக்காவில் ஹாம் டேவிட்டில் நடத்தவுள்ள பேச்சுக்களின் முடிவிற்காக இந்தியா காத்திருக்கும் என்று பிரதமர் வாஸ்பாய்கூறியுள்ளார்.

நேற்றுக் காலை புதுடில்லியிலிருந்து சீனா புறப்படும் முன்பு விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் இதனை வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

எல்லை கடந்த பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும் என்பதே தமது கவலை. இவ்விடயத்தில் சர்வதேச அளவில் நமது நட்பு நாடுகள் இந்தக் கருத்தை ஏற்கின்றன என்றும் கூறியுள்ளார்.

பாகிஸ்தானுடன் சீனாவின் நெருங்கிய உறவுகள் பற்றிக் கேட்டமைக்கு, தாம் ஏற்கனவே ரஷ்யாவில் மேற்கொண்ட அண்மைய பயணத்தின் போது சீன அதிபர் ஜு ஜ்ன்டாவுடன் இது பற்றிப் பேசியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.



பாக்தாத்துக்கு நூறு கி.மீ தொலைவில் ரமாதி நகரில் தேடுதல்நடவடிக்கையின் போது ரஷ்ய தயாரிப்பு AK 47 ரக துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட நபரை அழைத்துச் செல்லும் அமெரிக்க வீரர்



கிரேக்கத்தின் கிராமபுறத்தில் கிரேக்க அதிருப்தியாளர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் (ஐரோப்பிய யூனியனின் உச்சிமாநாடு நடக்கும் விடுதியை முற்றுகையிட கலகக் காரர் முயற்சி.

## தடை தளர்வு

(பெய்சிங்)

சார்ஸ் வைரஸ் பரவாது இருப்பதற்காக உல்லாசப் பயணிகள் திபெத்தினுள் செல்ல விதிக் கப்பட்டிருந்த தடையை யூலை மாதம் முதலாம் திகதி முதல் நீக்கவுள்ளதாகச் சீனா நேற்று அறிவித்துள்ளது.

இரண்டு மாதகாலத்திற்கு மேலாக விதிக்கப்பட்டதடை நீக்கப்படுவதாக உத்தியோக பூர்வப்பத்திரிகை கூறுகின்றது.

சீனாவில் சார்ஸ் இப்போது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளமையினாலும், திபெத்தில் இது வரை எவரும் சார்ஸினால் பீடிக்கப்படாமை உறுதி செய்யப்படாமையினாலும் உல்லாசப் பயணிகள் தடையை நீக்குவதாகக் கூறப்படுகின்றது.



லண்டனில் பிரான்ஸ் தூதரகத்துக்கு முன்னால தன்னைத்தானே தீமூட்டிய ஈரானிய வாசி(ஈரானிய எதிர்க்கட்சித் தலைவர் பிரான்ஸ் படைகள் கைது செய்ததை எதிர்த்து இத்தீக்குழிப்பு நடந்துள்ளது)

# ம.தி.மு.க.வினர் எண்மர் மீது ஜூலை-5 வழக்குத் தீர்ப்பு

## - வைகோவும் ஆஜராவார்

(சென்னை)

பொடோ வழக்கிலிருந்து ம.தி.மு.க.வினர் 08 பேரை விடுவிக்கக் கோரும் மனுமீதான தீர்ப்பு அடுத்த மாதம் 04ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில், இம்மனு மீதான விசாரணை முடிவடைந்துள்ளது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ராஜேந்திரன், அடுத்த மாதம் 04ஆம் திகதி தீர்ப்பளிக்கப்படும் என்றும், அன்றைய தினம் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள வைகோ உட்பட 09 பேரையும் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

# கர்நாடக சங்கீதமும்

# வன்னியும்...

**காரைநகர் தோப்புக் காட்டைச் சேர்ந்த சங்கீத பூஷணம் நல்லப்பா கந்தையா (வயது-66) அவர்களின் கருத்துப் பகிர்வு.**


கர்நாடக சங்கீதம் என்பது ஒரு புனிதமான தெய்வீகமான கலை. கர்நாடக சங்கீதம் பயில்வதற்கு குருபக்தியும், ஆர்வமும் அவசியம்.

இந்தியாவைப் பொறுத்தவரை குரு, சிஷ்ய முறையில் கர்நாடக சங்கீதம் பயின்று வித்துவான்களாக வந்தவர்கள் பலபேர் உண்டு.

கலைக்கல்லூரியில் பயின்று வெளிவருவதற்கும், குரு சிஷ்ய முறையில் இசையைக் கற்று வெளிவருவதற்கும் இடையே நிறைய வித்தியாசம் உண்டு.

குரு சிஷ்ய முறையின்படி குருவின் வீட்டில் இருந்து அவருக்கு தொண்டு செய்து, அவர் எப்போது அந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுப்பார் என்று எதிர்பார்த்து அந்தக் காலத்தில் சிஷ்யர்கள் குருவிடம் இருந்து இசை பயின்றனர்.

இவ்வாறு இசை பயின்றவர்கள் தான்



இன்று இந்தியாவில் பெரிய பெரிய சங்கீத வித்துவான்களாக இருக்கின்றார்கள்.

ஆனால், அந்தப் பாரம்பரியங்கள் எல்லாம் இப்போது அற்றுப் போய்விட்டது. குருவிடம் போய் இசை பயின்றாலும் காரியம் முடிய நீயும் போ நானும் போகிறேன் என்ற மாதிரி போய் வருகின்றார்களே ஒழிய உண்மையான அந்த குருபக்தி மருவிக் கொண்டு போய் விட்டது.

இருந்தும் சில சில மாணவர்கள் உண்மையான குருபக்தியுடன் இசை பயின்று வருகின்றார்கள். வன்னியில் கூட இவ்வாறு பயின்று இன்று பிரபலமாகி உள்ள சிலரை பெயர் சொல்லிக் குறிப்பிட முடியும்.

இவர்களில் சிலர் கர்நாடக சங்கீதத்தில் கச்சேரி செய்ய வேண்டும், பெரிய வித்துவான்களாக வரவேண்டும் என்ற நோக்கத்துடன் கர்நாடக சங்கீதத்தைப் பயின்று வருகின்றனர். முன்னேறியும் வருகின்றனர்.

அனேகமான மாணவர்கள் எல்லாம் பரீட்சைக்காக அதாவது வட இலங்கை சங்கீத சபை பரீட்சை எடுத்து சித்தியடைய வேண்டும்.

> கர்நாடக சங்கீதம் என்பது ஒரு புனிதமான தெய்வீகமான கலை. இதனை நாங்கள் கற்பதினாலும்,கேட்பதினாலும் ஒரு குதூகலம் ஏற்படுகின்றது.

உயர்தரத்திற்கு சங்கீதம் எடுத்து சித்தியடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் சங்கீதத்தைப் பயின்று கொண்டிருக்கிறார்களே தவிர, அத்துறையில் வித்துவத் தன்மையுடன் வரவேண்டும் என்ற நோக்கத்துடன் பயில்வதாக எனக்குத் தெரியவில்லை.

பாடசாலையில் ஆண்டு 6 தொடக்கம் இசை பயில்கின்றார்கள். அவர்களுக்கு அந்தந்த வகுப்புக்குரிய பாடத்திட்டங்களை வகுத்து இசையினைக் கற்பித்து வருகின்றார்கள்.

அந்த மாணவர்கள் குறிப்பிட்ட பரீட்சை எடுத்து சித்தியடைவதுடன் அதன் கல்வி முடிந்துவிடும்.

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் சங்கீத ஆசிரியர்களும் மாணவர்களுக்கு அந்த இசையைக் கற்பித்தால் போதும் பரீட்சைக்காக அந்தப் பாடங்களைக் கற்பித்தால் போதும் என்ற அளவில் இருக்கின்றார்களே ஒழிய மற்றும்படி மாணவர்களை சங்கீதத் துறையில் பெரிய வித்துவான்களாக ஆக்க வேண்டும், நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

அடுத்ததாக இன்று வன்னியைப் பொறுத்தளவில் ஏனைய மெல்லிசைப் பாடல்கள், சினிமாப் பாடல்கள் போன்றவற்றிற்கு இருக்கின்ற ஒரு முதலிடம் கர்நாடக சங்கீதத்துக்கு இல்லை.

ஏனென்றால் இந்தக் கர்நாடக சங்கீதத்தின் அறிவு இங்குள்ள மக்களுக்கு இல்லை. அதனால் அதனை ரசிக்கும் இந்த ஞானம் அவர்களிடம் இல்லை. ஆகவே மக்களை நாங்கள் குறை சொல்லவும் முடியாது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த அளவில் நல்லூர் போன்ற பகுதிகளில் கர்நாடக சங்கீதத்துக்குத் தனி இடம் உண்டு.




இன்று வன்னியில் ஒரு சிலர் ஆர்வமுடன் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாகப் போராளிகள் கூட ஆர்வமுடன் இதனைப் பயின்று வருவது வியப்பையும், சந்தோசத்தையும் ஏற்படுத்துகின்றது.

கர்நாடக சங்கீதத்தைப் பயில்வதன் மூலம் புரட்சிப் பாடல்கள் பாடுவதற்கு வசதி உண்டு. இந்த இசையினைப் பயில்பவர்கள் இராகங்களை அறிந்து கொள்ள முடியும். பாடல்களை மேலும் மெருகேற்றி இராகங்களை விளங்கி அழகுபடுத்திப் பாடும் தன்மை இதன் மூலம் ஏற்படும்.

அங்கே கர்நாடக சங்கீத கச்சேரி நடந்தால் பெருந்தொகையான மக்கள் அங்கு குழுமியிருந்து அதனை ஆர்வமுடன் இரசிப்பார்கள்.

என்னுடைய வேண்டுகோள் என்னவெனில், வன்னியில் ஒரு சில மாணவர்களாவது இந்தத் துறையில் ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டும். கர்நாடக சங்கீதத்தை முறைப்படி பயின்று கர்நாடக சங்கீத கச்சேரிகள் செய்ய வேண்டும் என்பதே எனது பேரவா.

வன்னியில் கர்நாடக சங்கீதத்தை மக்கள் விரும்பாமல் இருப்பதற்கு காரணம் இது தொடர்பான அறிவு இல்லாமல் இருப்பதுதான். அந்த இரசனை இல்லாமல் இருப்பதுதான்.

கர்நாடக சங்கீதத்தில் தேர்ச்சி உள்ளவர்கள மாணவர்களுக்கு இதில் ஆர்வத்தை ஊட்டி அதனைப் பயில்விப்பதனால் இத்துறையினை முன்னுக்குக் கொண்டுவர முடியும்.

இத்துறையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் இதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம் இருக்க வேண்டும்.

கர்நாடக சங்கீதத்தைக் கற்கின்ற மாணவர்களும் இதில் நல்ல ஆர்வம் எடுத்து அந்தத் துறையில் முன்னுக்கு வர முயற்சிக்க வேண்டும்.

கர்நாடக சங்கீதம் என்பது ஒரு புனிதமான தெய்வீகமான கலை. இறைவன் வாயிலாக வெளிப்பட்ட இசை என்றுதான் இதனை நாங்கள் கருத வேண்டும். அந்த இசையை நாங்கள் கற்பதனாலும், அதைக் கேட்பதினாலும் எங்களுடைய மனதில் ஒரு குதூகலம், ஆனந்தம் ஏற்படுகின்றது.

அதாவது, ஒரு தெய்வீகத் தன்மை எங்களுக்கு ஏற்படும். சில சமயங்களில் எங்களை அறியாமலே இந்த இசையைக் கேட்டால் ஆனந்தக் கண்ணீர் கூட வரும். மற்ற எந்த இசைக்கும் இல்லாத ஒரு தனி மகத்துவம் இந்தக் கர்நாடக சங்கீதத்துக்கு உண்டு.

> இன்று மெல்லிசைப் பாடல்கள்,சினிமாப் பாடல்கள் போன்றவற்றிற்கு இருக்கின்ற முதலிடம் கர்நாடக சங்கீதத்துக்கு இல்லை.

அதனால் இந்த மக்கள் கர்நாடக சங்கீதத்தை செவி குளிர அவர்கள் கேட்க வேண்டும் என்பதே எனது ஆசை.

☆ க.அர்ச்சனா ☆

## துயிலும் இல்ல சிரமதானத்தில் ஈடுபட்ட மக்கள் மீது படையினர் அச்சுறுத்தல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வரமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த மக்களைச் சிறிலங்காப் படையினர் அச்சுறுத்தி உள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டிருந்த மக்களைச் சிறிலங்காப் படையினரின் உந்துருளி அணியினர் மிரட்டும் வகையில் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்தனர்.

அத்துடன் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளரை அழைத்து படையினர் மிரட்டி உள்ளனர்.

இந்த விடயம் குறித்து யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இருவாரகாலமாக யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் மீதுசிறிலங்காப் படையினர் தீவிர சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

## மட்டக்களப்பில் சுகாதார பணிகளை இணைந்து முன்னெடுக்க நடவடிக்கை

### -கொக்கட்டிச்சோலையில் விசேட சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சுகாதார உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு ஒன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் சுகாதார சேவையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலையில் நேற்று முன்தினம் மட்டு அம்பாறை மாவட்ட சுகாதார சேவைகள் பொறுப்பாளர் செல்வக்குமார் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் மக்கள் எதிர் நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் மக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்க தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் நிகழ்வில் கலந்துகொண்ட சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

## திருகோணமலையில் மக்கள் மீள் குடியேற நடவடிக்கை

(திருமலை)

திருகோணமலை ஆறாம் கட்டை மற்றும் ஆத்திமோட்டைப் பகுதிகளில் மக்கள் குடியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 20 வருடகால போர்ச் சூழலின் விளைவாக இப்பகுதி மக்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்து தங்களின் உறவினர் நண்பர்களின் வீடுகளிலும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்து வந்தனர்.

தற்போதைய சமாதான சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டு இவர்கள் தங்கள் பகுதிகளை சீரமைத்துத் தற்காலிக குடியிருப்புக்களை அமைத்து மீளக் குடியேறுவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

### -நியாப் திட்டத்தின் கீழ்-

## குஞ்சுக்குளம் புனரமைப்பு பணிகள் ஆரம்பிப்பு

கரைதுறைப்பற்றுப் பிரதேசத் திற்குட்பட்ட முள்ளியவளை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள குஞ்சுக்குளம் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்குளப் புனரமைப்பு வேலைக்கான ஆரம்ப நிகழ்வு அண்மையில் முள்ளியவளை வடக்கு கமக்கார அமைப்புத் தலைவர் அருளானந்த சிவம் தலைமையில் ஆரம்பமானது.

குளப்புனரமைப்பு வேலையின் ஆரம்பவேலையினை கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் அப்பகுதி மக்களும் குளப்பங்காளிகளும் கலந்துகொண்டனர்.

மேற்படி குளபுனரமைப்புக்காக 43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்குளமானது சுமார் 6 அடிக்கு கூடியளவு மணலினால் தூர்வடைந்த நிலையில் உள்ளது.

ஆனால் மேற்படித் திட்டத்தில் குளக்கட்டும் வடிகால் வாய்க்கால் என்பனவே புனரமைக்கப்படவுள்ளது. இருப்பினும் குளதூர்வு அகற்றப்படாது புனரமைப்புச் செய்யப்படும் போது போதிய நீர் தேக்கம், நீர் ஊற்று இருக்காது போய்விடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்குள நீர் தேக்கத்தினாலேயே முள்ளியவளையின் பெரும்பகுதி கிணறுகளில் குடிநீர் தட்டுப்பாட்டு நிலவாமைக்கு முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதாள உலகக் குழுவினரின் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பாதாள உலகத் தலைவரெனக் கருதப்படும் பிரின்ஸ் கொலம்ஸ் என்பவருக்குச் சொந்தமான ஆயுதங்கள் சிலவற்றை இரகசியப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கிராண்ட்பாஸ்-புளுமெண்டல் வீதியில் கைப்பற்றப்பட்ட மேற்படி ஆயுதங்களில் சினைப்பர் ரக துப்பாக்கி ஒன்று, ரவைத் துப்பாக்கி, குண்டுகள், T 56 ரக ரவைகள், மகசின்2, SLR ரவைகள் என்பன அடங்கும்.

இவ்வாயுதங்கள் பல்வேறு குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என பொலிசார் தெரிவிக்கின்றனர். அத்துடன் மேற்படி தலைவரின் நெருங்கிய சகா ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பறவைகள் சரணாலயத்திற்கான நீர் விவசாய நடவடிக்கைக்காகத் தடுப்பு!

## - பாரிய விளைவுகள் ஏற்படலாமென அச்சம்!

(அலுவலக செய்தியாளர்)

சுண்டிக்குளப் பகுதியில் பறவைகளின் சரணாலயத்திற்கு இரணைமடுக் குளத்திலிருந்து செல்லும் கழிவுநீரினை விவசாயச் செய்கை என்ற போர்வையில் தடுத்து நிறுத்துவதென்பது பறவைகளின் சரணாலயத்திற்குப் பாரிய பின்விளைவினை ஏற்படுத்தும்.

இவ்வாறு கிளி.மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டத்தில் வைத்து கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; 1862ஆம் ஆண்டளவில் பிரகடனம் செய்யப்பட்டு இரணைமடுக்குளத்திலிருந்து செல்லும் கழிவுநீர் சுண்டிக்குளப் பகுதியிலுள்ள பறவைகள் சரணாலயத்துக்கு செல்வதால்கூடிய பறவைகள் உயிர் வாழக்கூடியதாகவுள்ளது எனவும் இப்பறவைகள் பயிர்களை நாசம் செய்யும் பல்வகை கிருமிகளை, பூச்சிகளை பூச்சிநாசினியின் தேவையின்றி அழிக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றஙன. இப்பறவைகள் விவசாயிகளுக்கு தோழனாக அமைந்துள்ளன.

எனவே பறவைகளின் சரணாலயத்திற்கான கோடைகால கழிவு நீரினை விவசாயம் என்ற போர்வையில் தடுப்பதானது பாரதூரமான பின்விளைவுகளை விவசாயிகளுக்கு ஏற்படுத்துவதுடன் பறவைகளும் அருகுவதற்கு வழிசமைத்து விடுமென்றார். (சோ)

## கற்றல் உபகரணம் வழங்கல்

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனையில் நடைபெற்றது அருள்மிகு அந்தோனியார் தெய்வக் குழந்தைகள் இல்லத்தினரால் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களை கண்டாவளைப பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கு வழங்கினார். (14)

*—ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் நடாத்தும்—*

## காக்கை வலிப்பிற்கான நடமாடும் வைத்திய சேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் 20 வயதிற்கு உட்பட்ட காக்கை வலிப்பு நோயாளிகளுக்கான நடமாடும் வைத்திய சேவை ஒன்றை கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் நோர்வே நாட்டிலிருந்து வருகைதரும் வைத்தியர் சூசை என்பவரால் 7ஆம் மாதம் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் நடாத்தவுள்ளது.

இம்மருத்துவ சேவையில் சிகிச்சைபெற விரும்புகின்ற அனைத்து 20 வயதிற்குட்பட்ட நோயாளிகளும் பின்வரும் இடங்க ளில் 25-06-2003 - 30-06-2003 வரை தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும் வண்ணம் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் கேட்டுள்ளது.

பதிவுகளை ஜெயபுரம் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தொடர்பகம், கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (டிப்போச் சந்திக்கு அருகாமை), கல்மடுநகர் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தொடர்பகம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளலாம்.

## கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெற்செய்கை கடன்களைப் பெற்றுத்தர வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் காலபோக நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு சுழற்சி முறையில் மீளளிப்பு கடன்கள் வழங்கப்பெற்றும் இதுவரை விவசாயிகள் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தவில்லையெனத் தெரியவந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்; மேற்படி நிறுவனத்தினால் கடந்த காலபோக நெற்செய்கையிலீடுபட்ட 46 விவசாயிகளுக்கு தலா 11,525 ரூபா வீதம் கடன்கள் வழங்கப்பட்டதாகவும் அறுவடை செய்யப்பெற்றும் இதுவரை கடனை மேற்படி விவசாயிகள் மீளச் செலுத்தவில்லையெனவும். இப்பணத்தினை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்றுத்தரும் வண்ணம் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகத்திடம் மேற்படி நிறுவனத்தின் வேண்டியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (சோ)

## ஆயுர்வேத அறிவைப் புகட்ட தமிழில் ஆயுர்வேத கைநூல்

(அலுவலக செய்தியாளர்)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆயுர்வேத அறிவைப் புகட்டும் வகையில் முதன் முறையாக தமிழில் மேலதிக ஆசிரியர் கைநூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தேசியக் கல்வி நிறுவகமும், ஆயுர வேத திணைக்களமும் இணைந்து பாடசாலைகளில் 7ஆம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி பயிலும் மாணவர்களின் மத்தியில் சமூகக் கல்வியுடன் ஆயுர் வேத அறிவைப புகட்டும் வகையில் "சமூகக்கல்வியும் வரலாறும், ஆயுர் வேத வாழ்க்கைத் தத்துவம்" என்னும் மேலதிக ஆசிரியர் கைநூலினை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி நூல் கிளி/முல்லை துணுக்காய் வலய பாடசாலைகளில் சமூகக்கல்வி புகட்டும் ஆசிரியர்களுக்கு அண்மையில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் வைத்து உள்நாட்டு மருத்துவ தேசிய நிறுவனப் பணிப்பாளர் சிசில் பள்ளகெதறவினால் கையளிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## 11 வறுமை நிலையிலுள்ள பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உதவி

கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள விதவைகள் மற்றும் வறுமையிலும் வறுமையாகப் பாதிக்கப்பட்ட 11 பெண்களுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் கிளிநொச்சி அரச அதிபர் நிதியில் இருந்து 55 ஆயிரம் ரூபா பெறப்பட்டு தலா 5 ஆயிரம் ரூபா மானியமாக வழங்கப்பட்டது.

மேற்படி நிகழ்வு கடந்த 18ஆம் திகதி கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பி.கா. மத்தியாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிராம சேவகர் எஸ்எஸ் சின்னத்தம்பி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இரா.பத்மநாதன் ஆகியோர் காசோலைகளை வழங்கினர். (14)



கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற ஆசிரியர்களின் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

ஆ. சுபாஸ்கரன்
[வவுனியா செய்தியாளர்]

## மட்டு. மாவடிவேம்பு மத்திய மருந்தகம் செயற்படாமையால் மக்கள் விசனம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேசத்திலுள்ள மாவடிவேம்பு மத்திய மருந்தகம் அமைக்கப்பட்டு பல வருடங்களாகியும் மக்களுக்குரிய வைத்தியசேவை இங்கு நடைபெறுவதில்லை. வாரத்தில் இரண்டு நாட்களாக செவ்வாய், வியாழன் போன்ற கிழமைகள் மாத்திரமே மேற்படி மருந்தகத்தில் வைத்தியசேவை நடைபெறுகின்றது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சந்தன மடு, பெரிய வட்டவான், மயிலவட்டவான், பாலாமடு, ஈராளக்குளம், அடங்கலாக பெரும்பாலான பகுதிகளும், இவற்றுடன் வந்தாறுமூலை, களுவான் கேணி, பாலச்சோலை, சித்தாண்டி, மாவடிவேம்பு மொறக்கொட்டாஞ் சேனை, உதயன் மூலை போன்ற பல பகுதி மக்கள் மேற்படி வைத்திய சீர்கேட்டினால் பாதிக்கப்படுகின்றனர். இது இவ்வா றிருக்க மேற்படி மருந்தகத்திற்கு நிரந்தர வைத்தியர் இதுவரையில் நியமிக்கப்படவில்லை. இது தொடர்பாக மாவட்ட சுகாதார அதிகாரி உட்பட சுகாதார அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருடைய கவனத்திற்கும் கிராமத்தின் பல அமைப்புகள் அறிவித்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மேற்படி மருந்தகத்தில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சைபெறும் விடுதி வைத்திய விடுதி போன்றவைகள் அமைக்கப்பட்டும் இதுவரையில் சுற்று வேலி அமைக்கப்படவில்லை.

இதனால் புல்வெளிகளில் மேய வேண்டிய மாடுகள் மருந்தகத்தின் உட்பகுதியில் மேய்கின்றன. இவற்றைக் கண்டும் காணாதவர்கள் போல செயற்படுவது உண்மையில் மனவேதனைக்குரிய விடயமாகும். இம்மாவட்டத்தின் சுகாதார நடவடிக்கைகளை அபிவிருத்திப் பாதைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய வைத்திய அதிகாரிகள் கிழக்குப் புனர்வாழ்வு அமைச்சு தமிழர் தாயகப் பகுதிகளில், அபிவிருத்திக்காக மௌனம் சாதிப்பதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

செந்தூரன் செந்தமிழ் முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை 24ம் திகதி பி.ப.2.00 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சிவநகர் உருத்திரபுரத்திலுள்ள செந்தூரன் மைதானத்தில் மேற்படி முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நடைபெறவுள்ளது.

மழலைச் சிறார்களின் மேற்படி விளையாட்டுப் போட்டியினை அனைவரும் சமூகம் கொடுத்து கண்டு களிக்கும் வண்ணம் முன்பள்ளியினர் வேண்டியுள்ளனர். (பா)

## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வு

(வட்டக்கச்சி)

தமிழர் புனர்வாழ்வாழ்வுக்கழக அனுசரணையுடன் கிளி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒருங்கிணைப்பால் கண்டாவளை பிரதேச முதன்மை நிறுவனமான கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தால் நடத்தப்படும் கஜந்தா முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வு கடந்தவியாழன் அன்று பி.ப.2.30 மணியளவில் ஆரம்பமானது.

மாவடி வலயப் பொறுப்பாளர் இராஜ கோபால் தலைமையில் மேற்படி நிகழ்வுகள் ஆரம்பமானமுங்கள விளக்கினை மாவீரன் கௌள் கைமாறனின் தாயாரும் அம்மன் கோவில் நிர்வாகத் தலைவரும் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியினை மாவடி வலயப் பொறுப்பாளர் ராசன் ஏற்றி வைத்தார். ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து தலைமையுரையினை மாவடி வலையப் பொறுப்பாளர் வழங்கினார். நன்றி உரையினை முன்பள்ளி ஆசிரியை வழங்கினார். தொடர்ந்து விளையாட்டுக்களில் பங்கேற்று வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (12)

## புகலிடம் மறுக்கப்பட்ட நாடுகள் பட்டியலில் இலங்கை உட்பட ஏழு நாடுகள் இணைப்பு!

### - பிரிட்டனின் செயல் குறித்து பலத்த கண்டனம்

பிரிட்டனில் புகலிடக் கோரிக்கை மறுக்கப்படும் நாட்டினர் பட்டியலில் இலங்கை உட்பட 07 நாடுகள் சேர்க்கப்பட்டதற்கு அகதிகள் சபையும், சர்வதேச மன்னிப்புச் சபையும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

பங்களாதேஷ், பொலிவியா, பிரேஸில், ஈக்குவடோர், தென் ஆபிரிக்கா, உக்ரேன் ஆகிய நாடுகளுடன் இலங்கை உட்பட 07 நாடுகள் புகலிடம் மறுக்கப்படும் பட்டியலில் உள்ளன.

இதேநேரம் கடந்த ஜனவரி-மார்ச் இடையில் இரண்டு வீதமான இலங்கை விண்ணப்பதாரிகளுக்கே பிரிட்டன் அகதிகள் அந்தஸ்து வழங்கியதாகவும் ஏனைய 98 வீதமான இலங்கையரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

பிரிட்டனில் கடந்த வருடம் அகதிகள் அந்தஸ்துக் கோரிய 4,980 பேரில் 3,180பேர் இலங்கையர்கள் என்றும் கூறப்படுகின்றது.

பிரிட்டனில் புதிய நடைமுறைக்கமைய புகலிடம் கோரும் விண்ணப்பங்கள் மிக விரைவாக பரிசீலிக்கப்படும் அதே நேரம் இவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு, இவர்கள் திருப்பியனுப்பப்படுவதற்கிடையில் அவர்கள் மேன்முறையீடு செய்யமுடியாது.

இதேநேரம், தற்போது நிலவும் சட்டங்களுக்கமைய இலங்கையர் உட்பட மேற்படி 07 நாடுகளையும் சேர்ந்த 820 பேர் மேலும் சில காலம் பிரிட்டனில் தங்கியிருக்கவும், மேலும் 170 இலங்கையர் அடுத்த 03 மாதங்கள் தங்கியிருக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு போர்நிறுத்தம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு ஒன்றரை வருடமாக அமைதி நிலவுவதால் இலங்கையும் புகலிடம் மறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால், பிரிட்டனின் இந்த புதிய நடைமுறைக்கு அகதிகள் சபையும், சர்வதேச மன்னிப்புச் சபையும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இது குறித்து மீள் பரிசீலனை செய்யுமாறும் கேட்டுள்ளனர்.

# தென்னை பயிர்ச்செய்கை மானியத்திற்கு விண்ணப்பித்த பெரும்பான்மையோர் ஏமாற்றம்!

## - மாவட்டத்திற்கு 250 ஏக்கருக்கே மானிய உதவி

**தென்னை பயிர்ச்செய்கை சபையால் மாவட்டத்திற்கு 250 ஏக்கர் தென்னை பயிர்ச்செய்கைக்கு மட்டுமே மானியம் வழங்கு வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

நீண்ட காலங்களின் பின் வடக்கு கிழக்கு பகுதியில் தென்னை பயிர்ச் செய்கைக்கான மானியத் திட்டம் அமுல்படுத்தப்படுவதால் இவ் வருடம் மட்டும் மாவட்டம் ஒன்றுக்கு மட்டும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் பரப்பில் தென்னை பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு மக்களால் மானியக் கோரிக்கைக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

போரின் காரணமாக பெருமளவு தென்னை அழிவுகளை எதிர்கொண்டுள்ள இந்த மாவட்டங்களில் தற்போதைய சூழ்நிலையிலும் கூட மிகக் குறுகிய அளவு பரப்பிற்கே தென்னை பயிர்ச்செய்கைக்கான மானியம் வழங்கப்படவுள்ளது.

இதனால் தென்னை பயிர்ச் செய்கை மானியத்துக்காக விண்ணப்பித்தவர்கள் பெரும் ஏமாற்றமும் விசனமும் அடைந்துள்ளனர்.

இதனால் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை செலுத்தி மானியக் கொடுப்பனவுக்கான பரப்பளவு அதிகரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா நிறுவனம் தனது பத்தாவது அகவையை முன்னிட்டு அண்மையில் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணியினை மேற்கொண்டது. இப்பணியில் மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

(லோ)

# பல்கலைக்கழகங்களுள் வன்முறை அரசியலை ஏற்படுத்த முயற்சி!

## - மாணவர் அமைப்புகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்குள் வன்முறை அரசியலை மீண்டும் ஏற்படுத்துவதற்கு அனைத்து பல்கலைகழக மாணவர் அமைப்பு செயற்பட்டு வருவதாக களனி பல்கலைக்கழகத்தின் சுயாதீன மாணவர் சமூகம் உட்பட ஏனைய பல்கலைகழகங்களின் சுயாதீன மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தில் அண்மையில் சுயாதீன மாணவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்புடன் தொடர்புடைய களனி பல்கலைக்கழகத்தின் மாணவ சங்க பிரதிநிதிகள் தொடர்பு கொண்டுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்

# வடக்கு-கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைக்கு புலிகளுடன் பேசுவது முக்கியமானது!

## - அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கலந்துரையாடுவது முக்கியமானது என சிறிலங்காவின் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு அமெரிக்கா ஒரு கோடி ஐம்பது லட்சம் டொலர்களை வழங்க உள்ளது.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ள என எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சூரியக்கதிரில் காயமடைந்த சிப்பாய் வீழ்ந்து மரணம்!

(கொழும்பு)

வடபகுதியில் சூரியக்கதிர் நடவடிக்கையின்போது ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்று வந்த இராணுவ வீரர் கட்டிலில் இருந்து விழுந்து மரணமடைந்துள்ளார். மரணமானவர் தயாரத்ன பெரேரா என்ற 32 வயது கோப்ரல் ஆவார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, மேற்படி இராணுவீரர் சூரியக்கதிர் நடவடிக்கையின்போது காயமடைந்ததாகவும் அது சுகமாகி தியத்தலாவ இராணுவ முகாமில் கடமையாற்றி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் குணமாக்கப்பட்ட புண் மீண்டும் பாதிப்பு ஏற்பட்டதால் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் அவர் திடீரென வைத்தியசாலைக் கட்டிலிலிருந்து வீழ்ந்து மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தென்பகுதி வெள்ளப் பாதிப்புக்களுக்கு ஜெனீவா நிதியிலிருந்து உதவியளிக்க முடிவு

(கொழும்பு)

ஜெனீவா மாநாட்டில் கிடைத்த நிதி உதவியின் மூலம் தென்னிலங்கையில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பல பகுதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த மாநாட்டின் போது 27.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை 23 நாடுகள் இணைந்து வழங்கி இருந்தன.

அண்மையில் மாத்தறை, களுத்துறை, காலி, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது.

இதனால் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்திருந்தனர். பத்தாயிரம் வீடுகள் அழிந்து போய் விட்டன.

ஜெனீவா மாநாட்டின் நிதி உதவியின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் "உணவுக்காக வேலை" என்ற திட்டத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்படவுள்ளன.

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் உள்ள அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலையில் கல்வியிலும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த தாய், தந்தையரை இழந்த மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் வருட மாணவர்கள் கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கி உள்ளனர்.

அப்பியாசக் கொப்பிகள், எழுது பொருட்கள் அடங்கிய கற்றல் உபகரணங்களை முதலாம் வருட மாணவர்கள் பாடசாலை அதிபர் திருமதி L.F. நடேசமூர்த்தியிடம் கையளித்தனர். (10)

# ஜப்பானில் ஜே.வி.பி.யினர் செயல் நாட்டிற்கு இழுக்கு!

## - ஆளும் கட்சி எம்.பி. கருத்து

பௌத்த தேரர் ஒருவரையும், விகாரையையும் தாக்கி ஜப்பான் நன்கொடை மாநாட்டை குழப்ப முயன்ற ஜே.வி.பி.யின் செயல் முழு நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒன்றாகும் என ஐ.தே. க. எம்.பி. கூறியுள்ளார்.

மேலும் அச்சம்பவம் தொடர்பாக அக்கட்சியின் தலைவரே ஜூன் 17இல் பாராளுமன்றில் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார். எனினும் சம்பவம் நடைபெற்ற அன்று தமது உறுப்பினர்கள் சம்பந்தப்படவில்லை எனவே கூறினர் என்று மேற்படி ஐ.தே.க. எம்.பி. ஜயந்த கெடகொட தெரிவித்துள்ளார்.

# தமிழ் பண்பாட்டிற்கு அமைவாக ஓவியக்கலை பாடவிதானம் இல்லை

## - மாகாண கல்வியமைச்சின் செயலர்

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களின் ஓவியக் கண்காட்சி திருகோணமலையில் இடம்பெற்றது.

இந்த ஓவியக் கண்காட்சி இரண்டு தினங்கள் சென் ஜோசப் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் உரையாற்றுகையில்;

வடக்கு கிழக்கு மாகாண ஓவியக் கலை பாடவிதானம் தமிழ் பண்பாட்டுக்கு ஏற்ற பாடவிதானமாக அமையவில்லை. ஆகவே வடக்கு கிழக்கிற்கான பாரம்பரிய ஓவிய மரபு ஒன்றை உருவாக்க வேண்டும்.

சிங்கள ஓவியத்துக்கான பாரம்பரிய மரபு ஒன்று உள்ளது. ஆனால் தமிழ் ஓவியத்துக்கென பாரம்பரிய மரபு இல்லை.

தற்போது பாடசாலையில் அமுலில் உள்ள ஓவிய பாடவிதானம் தமிழ் காலாசாரத்திற்கான பாடவிதானமாக அமையவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(25)

# வைத்தியசாலைகள் சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

உலக சுற்றாடல் வாரத்தினை யொட்டி வவுனியா மாவட்ட பொ.மே. நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினால் மூன்று அரசினர் வைத்தியசாலைகள் சிரமதான அடிப்படையில் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

செட்டிகுளம் மாவட்ட அரசினர் வைத்தியசாலை, செட்டிகுளம், முதலியார்குளம், முகத்தான்குளம், கங்கள்குளம், கிறிஸ்தவகுளம், ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண்களாலும் மாங்குளம் வைத்தியசாலை நேரியகுளம், சிப்பிக்குளம், வீரபுரம், மாங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண்களாலும், பாவற்குளம் அரசினர் வைத்தியசாலை பாவற்குளம், சூடுவெந்த புலவும் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண்களாலும், சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (லோ)

# சேமநலன் உடன்பாடு

லெபனானில் வேலை செய்து வரும் இலங்கையர்களின் சேம நலன்களைக் கவனிப்பதற்கென சிறிலங்கா அரசு அந்நாட்டுடன் உடன்படிக்கையொன்றை செய்துள்ளது.

லெபனான் தொழில் அமைச்சருடன் நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடாத்திய பின்னர் தொழிலமைச்சர் சமரசிங்க இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார்.

# வீட்டுத்தரிசிப்பும் கருத்தமர்வும்

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் பிரதேச முன்பள்ளிகுழுத் தலைவர் தா.கிருஷ்ணசாமி தலைமையில் நேற்றுமுன்தினம் 10.30 மணியளவில் செல்விபுரம் கிழக்குப் பகுதியில் கல்வி சுகாதாரம் பற்றிய வீட்டுத் தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து 12.30 மணிக்கு தலைவர் தலைமையில் கருத்தரங்கு ஆரம்பமானது.

இதில் பூநகரி அபிவிருத்தி புனர் வாழ்வுக்கழக இணைப்பாளர் செல்வன் சி.கிருபாகரன், பூநகரி பிரதேச முன்பள்ளி மேற்பார்வையாளர் செல்வி ப.திருச்செல்வி, முதன்மை ஆசிரியர் செல்வி வை. நளாயினி ஆகியோரின் கருத் துரைகளைத் தொடர்ந்து சமூகநலத் திட்ட இணைப்பாளர் செல்வி. கா.ஜெயந்தினியின் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவுபெற்றது.


மாணவர் அமைப்பின் ஆதரவில்
வன்னி புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன்
தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பினரின்
கணினி பயிற்சி நிலையம் முள்ளியவளை

புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்



1. OFFICE APPLICATION
1.1 Introduction to Computer System Structure
1.2 Introduction to Micro soft Windows Operating Systems
1,3 MS WORD XP
1.4 MS EXCEL XP

2. TYPE SETTING & GRAPHICDESIGD
2.1 Adobe Pagemaker 6.5 & 7.0
2.2 Adobe Photo Shop 7.0 (Online Study)
2.3 Coputer Typping

3. HARD WARE

4. COMPUTER TYPPING

மேற்படி பயிற்சி நெறியில் இணைய விரும்புவர்கள் 05-07-2003ற்கு முன்பதாக தெரிவு செய்த பயிற்சி நெறியை குறிப்பிட்டு உங்கள் சுயவிபர கோவையுடன் விண்ணப்பிக்கவும்.
(ஏற்கனவே பதிவு செய்தவர்கள் தங்கள் பயிற்சி நெறியை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.)
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரியும் மேலதிக விபரங்களுக்கும் [illegible]

தமிழ் தகவல் தொழில் [illegible] ஒருங்கமைப்பு
கணினி பயிற்சி நிலையம்
முள்ளியவளை.
(3241)



## சிந்தனைக்கு

சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்கு முறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந் திரத்திற்காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23-06-2003

## நோக்கத்தை எட்டுவதற்கு...!

இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சை எடுப்பதற்கே அச்சப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது இடைக்கால நிர்வாகம் என்ற அடிப்படையில் தமது கருத்துக்களை முன்வைக்கத் தொடங்கியுள்ளார். ஆயினும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் வரைபு குறித்த இறுதி வடிவத்தினை அவர் முடிவு செய்யவில்லை என்றே வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது அரசாங்கம் பரிசீலித்துவரும் இடைக்கால நிர்வாகசபை ன்பது அதன் முழுவடிவம் வெளிவந்த பின்னரே விடுதலைப்புலிகளால் அது ஏற்றுக் கொள்ளப்படுமா? சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடன் ஆரம்பிக்கப்படுமா? என்பது குறித்த முடிவுகள் தெரியவரும். ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க இன்னமும் அரசியல் யாப்பிற்கு உட்பட்டு நின்றுகொண்டே இடைக்கால நிர்வாகத்தைப் பற்றிப் பேசுகின்றாரா? அன்றி அதற்கு வெளியில் வரத் துணிந்து விட்டாரா? என்பது குறித்து எதுவுமே தெரியவில்லை.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாகம் குறித்துத் தற்பொழுது பேசமுற்பட்டு நிற்கின்றமைக்கு இரு முக்கிய காரணங்கள் அடிப்படையாகவுள்ளன. ஒன்று, சர்வதேச ரீதியில் இதற்கு ஆதரவானதொரு போக்குக் காணப்படுகின்றமையாகும். இரண்டாவதாக டோக்கியோ மாநாட்டில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு இது அவசியமாகியுள்ளது.

சர்வதேச நாடுகளைப் பொறுத்து குறிப்பாக மேற்கு நாடுகளைப் பொறுத்து இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படுவதற்கு ஆதரவானதொரு போக்கே காணப்படுகின்றது. இதனை முதலில் நோர்வே அரசு பிரதிபலித்ததாயினும் தற்பொழுது கொழும்பிலுள்ள மேற்கு நாட்டுத்துதுவர்களும் பிரதி பலிப்பதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இது ஒருவகையில் அரசாங்கம் மீது இராஜதந்திர அழுத்தமாகப் பிரயோகிக்கப்படுவது போல் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்தோடு, சர்வதேச நாடுகள் குறிப்பாக ஜப்பான் உள்ளிட்ட சிறிலங்காவிற்கு நிதி உதவி செய்யும் மேற்குலக நாடுகள் தம்மால் பெரும்முயற்சியில் கூட்டப்பட்ட டோக்கியோ மாநாட்டின் நோக்கம் எட்டப்பட வேண்டுமானால் இடைக்கால நிர்வாகம் ஒன்று அவசியமாகிவிட்டதைப் புரிந்து கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. மேலும் இடைக்கால நிர்வாகம் ஒன்று இல்லாதுவிடில், டோக்கியோ மாநாட்டில் தாம் பங்கேற்றதில் அர்த்தம் எதுவும் இல்லாது போய்விடும் எனக் கருதுகின்றன.

ஜப்பான் டோக்கியோ மாநாட்டைக் கூட்டுவதில் தீவிர முயற்சிகளை எடுத்துக் கொண்ட நாடாகும். அந்நாடும், டோக்கியோ மாநாட்டின் வெற்றியானது இடைக்கால நிர்வாகம் அமைப்பதிலேயே தங்கியுள்ளது என்பதைப் புரிந்து கொண்டுள்ளமையால், இடைக்கால நிர்வாகம் அமைப்பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடம் பிரஸ்தாபித்ததாகவும் தகவல் ஊடகங்கள் கூறுகின்றன. அதாவது இடைக்கால நிர்வாகம் குறித்து வலியுறுத்தியதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் இடைக்கால நிர்வாகம் என்பது அவசியமானதொன்றாகியுள்ளது. ஏனெனில், டோக்கியோ பெரும் தொகை நிதியுதவி பெற்றுக் கொள்ளப்பட்டதாகப் பெரும் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அரசாங்கத்திற்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படாத பட்சத்தில் உறுதியளிக்கப்பட்ட தொகையில் பெரும் வெட்டு ஏற்படலாம் என்பது ஏற்கனவே தெரிந்த தொன்று. இது அரசிற்கு எதிரான பிரச்சாரத்திற்குத் தீனி போன்றதாகும்.

இந்நிலையில் இடைக்கால நிர்வாகம் என்பது குறித்து அரசாங்கம் விரும்பியோ அன்றி விரும்பாமலோ பிரஸ்தாபிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றது என்றே கூறலாம். ஆனால், அரசாங்கம் இதனை ஒரு பிரச்சார யுக்தியாக மட்டுமே பயன்படுத்துமேயானால் அதில் அரசாங்கத்திற்கு பயன் ஏதும் கிட்டிவிடப் போவதில்லை.

இதேவேளை, ஐ.தே. முன்னணி அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை உருவாக்குவது குறித்து உறுதியான முடிவொன்றிற்கு வருமானால். சனாதிபதி சந்திரிகா எவ்வாறு எதிர்கொள்வது என்பதும் முக்கியமானதாகும். கடந்த காலத்தில் இடைக்கால நிர்வாகம் குறித்து அவர் பிரஸ்தா பித்தவர் ஆயினும், தற்பொழுது என்ன கூறுவார் எப்படிச் செயற்படுவார் என்பதைத் தற்பொழுது கூறிவிட முடியாது. அதிலும் சனாதிபதி சந்திரிகா நேரத்திற்கு ஒன்று பேசுபவர். ஆகையினால் இறுதிவரை எதுவும் அது பற்றிக் கூறிவிட முடியாது.

ஆனால் பிரதமர் ரணிலுக்கோ அன்றிச் சனாதிபதி சந்திரிகாவிற்கோ எத்தகைய விருப்பங்கள் இருப்பினும் இடைக்கால நிர்வாக சபை குறித்து ஒரு உறுதியான முடிவிற்கு அவர்கள் வருதல் அவசியமானதாகும். அவ்வாறு இல்லாதுவிடில், சிறிலங்கா அதை எதிர்பார்க்கும் நிதியுதவி அதன் கைகளுக்கு எட்டாது போகலாம். அதேபோன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் முன்னேற்றம் காண்பது கடினமாகலாம். இது ரணில் தலைமையிலான அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, சனாதிபதி சந்திரிகாவிற்கும் நன்மை அளிப்பதாக இருக்கமாட்டாது.

# படையினர் அனுமதி அட்டை பெற்றோருக்கே நயினை நாகபூசணி அம்மன் திருவிழாவிற்கு அனுமதி!

## படையினர் நடவடிக்கையால் மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழாவில் கலந்து கொள்வோர் அனுமதி அட்டையினைப்பெற்றிருந்தால் மட்டுமே அங்கு செல்வதற்கு சோதனைச் சாவடியூடாக அனுமதிக்கப்படுவர் எனசிறிலங்காப்படையினர் கடும் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இத்திருவிழாவிற்குச் செல்லும் தனிப்பட்டவர்களும், குடும்பங்களும் அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற பின்னரே அங்கு செல்ல அனுமதிக்கப்படுவர். இந்த நடவடிக்கையினைக் கடைப்பிடிக்கத் தவறுவோர் ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

படையினரின் இந்த உத்தரவு காரணமாகப் பக்தர்கள் விசனம் அடைந்துள்ளதுடன் இதுதொடர்பாகப் பல தரப்பினரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேலும் இராணுவத்தினரால் சோதனை நடத்தப்படும் பகுதியில் மக்கள் கடும் வெயிலில் வைத்தே சோதனையிடப்படவுள்ளனர். அப்பகுதியில் சோதனையிடுவதற்கான பகுதிகள் எதுவும் அமைக்கப்படவில்லை என்பதுடன் அங்கு மக்கள் தங்கக் கூடிய மரநிழல்கள் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவிற்கு இம்முறை சகல பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தரவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. (33)

# இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த சனாதிபதிக்கு சர்வதேச அழுத்தம் தேவை

## -சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபையினை ஏற்படுத்த சிறிலங்கா சனாதிபதிக்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று ஈ.பி. ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

ஜப்பானிய தூதரகத்தின் இரண்டாவது செயலாளரை சந்தித்துப் பேசிய போதே அவர் இக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு மட்டும் சர்வதேச நாடுகள் அழுத்தத்தைக் கொடுப்பதை விடுத்து சனாதிபதிக்கும் அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

# தமிழ்க்குழுக்களுக்கு அரசாங்கம் ஆயுதங்களை வழங்கவேண்டும்

## - பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு)

தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க முடியாது விட்டால் அந்த இயக்கங்களுக்கு மீள ஆயுதங்களை வழங்க வேண்டும் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத்அமுனுகம கோரியுள்ளார்.

மாற்று இயக்கங்களின் உறுப்பினர்கள் கொல்லப்படுவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் அல்ல என்று அரசு தெரிவித்திருப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமே இவர்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டனர். எனவே அவர்களுக்கு சிறிலங்கா அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

# வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்திலான ஆண்கள் பெருவிளையாட்டுப் போட்டி

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்திலானஆண்களுக்கான பெருவிளையாட்டுப்போட்டி திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை மைக்கெய்சர் விளையாட்டரங்கில் இன்று 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதிவரை ஆண்களுக்கான பெருவிளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் 15வயதின் கீழ் ஆண்கள், 17 வயதின் கீழ் ஆண்கள், 19 வயதின் கீழ் ஆண்கள் ஆகிய பிரிவுகளுக்கான கிரிக்கெட் போட்டிகளும் 24ஆம் திகதி 15 வயதின் கீழ் ஆண்கள் 17 வயதின்கீழ் ஆண்கள், 19 வயதின்கீழ் ஆண்கள் ஆகிய பிரிவுகளுக்கான கரபந்தாட்டப்போட்டிகளும், 25ஆம் திகதி 15 வயதின் கீழ் ஆண்கள், 17 வயதின்கீழ் ஆண்கள், 19 வயதின் கீழ் ஆண்கள் ஆகிய பிரிவுகளுக்கான கால்பந்தாட்டப் போட்டிகளும், எல்லே போட்டியும் நடைபெற உள்ளது. (10)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்குரிய தொகை நிறுத்தம்!

இந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியாவுக்குச் சேரவேண்டிய தொகையை நிறுத்தி வைக்க, சர்வதேச கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

லண்டனில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இந்தச் சபைக் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை விளையாட்டுக்களின் உரிமைகளைப் பெற்ற நோபல் கிரிக்கெட் கழகம் கோரக் கூடிய நட்ட ஈட்டை மதிப்பிட முடியாத காரணத்தால் இந்தியாவுக்கான தொகையை நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான விளையாட்டுத் தொகை சுமார் 90 இலட்சம் அமெரிக்க டொலராக இருக்கக் கூடும் என மதிப்பிடப்படுகின்றது.

தங்களது விளம்பர ஒப்பந்தக் காரர்கள் பாதிக்கப்படக் கூடும் என்று கூறி, உலகக் கோப்பைக் கிரிக்கெட் ஒப்பந்தத்தில் இந்திய வீரர்கள் கையெழுத்திட மறுத்துள்ளார்கள்.

விளையாட்டு வீரர்களுக்கான திருத்தப்பட்ட ஒப்பந்தத்தில் மட்டுமே இவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

# சிறிலங்கா 354 ஓட்டங்கள்; மேற்கிந்தியா 2 விக். -161

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையே சென்லூயஸில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று முன்தினம் மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 161 ஓட்டங்களைப் பெற்றது. சிறிலங்கா அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 354 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மாவன் அத்த பத்து 118 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். மேற்கிந்தியத்தீவுகள் அணியில கென்ஸ் ஆட்டம் இழக்காது 74 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.



# பொங்கு தமிழில் கலந்துகொள்வோரின் கையொப்பம் பெறத் தீர்மானம்

## உலக நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படும்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் எதிர்வரும் 27ஆம் திகதி நடத்தப்படவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்களின் உணர்வுகளை உலகிற்கு வெளிக்கொண்டுவரும் முகமாக இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் சகல மக்களிடமும் கையெழுத்துப்பெறப்படவுள்ளது. இக்கையெழுத்துப்பிரதிகள் உலகின் சகல நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இம் முடிவு நேற்று மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொங்கு தமிழ்ப் போராட்டத்திற்கு பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வரவுள்ளமையால் வருகை தருகின்ற மக்களுக்கு இராணுவத்தினர் சோதனைக் கெடுபிடிகளைச் செய்யாதபடி இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் முறையிட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபடுகின்ற மக்கள் தாங்கள் எவ்விதத்திலும் இராணுவத்துடன் வன்முறையில் ஈடுபடப்போவதில்லையெனக் கூறியுள்ளனர். (33)

### யாழ்.இல் காணமற் போனோர் தொடர்பாக

# உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய முடிவு

1996, 1997 ஆம் ஆண்டுகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மிக விரைவில் வழக்குத் தாக்கல் ஒன்றை செய்யப்போவதாக யாழ். மாவட்ட காணாமற் போனோர் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று யாழ். முனீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற இச்சங்கக் கூட்டத்திலேயே இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவ் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்னர் காணாமற் போனோர் தொடர்பாக சனாதிபதியுடன் நேரடியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் இச் சங்கம் தீர்மானித்துள்ளது. (33)

# வீடுகளுக்கு முன்னால் இரவில் பதுங்கி நிற்கும் ராணுவம்

(யாழ்ப்பாணம்)

போர் நிறுத்த உடன்படிக்கை செய்வதற்கு முன்னர் இராணுவத்தினர் வீடுகளுக்கு முன் நின்றமையைப் போன்று தற்போது மக்களுக்குத் தெரியாமல் வீட்டு வாசல்களிலும், பிரதான வீதிகளுக்கு அருகிலுள்ள வீடுகளுக்கு முன்பாகவும் நிற்பதனால் இரவுவேளைகளில் மக்கள் வெளியே செல்வதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர். (33)

# முன்னாள் ஈ.பி.டி.பி பா.உவின் வீட்டில் சிறுவன் மீது சித்திரவதை

முன்னாள் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் கொழும்பு தலவத்துகொடயிலுள்ள தமது வீட்டில் 12 வயதுச் சிறுவன் ஒருவனை வீட்டு வேலைக்கு அமர்த்தி சித்திரவதைப் படுத்தியமை தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இச்சிறுவன் தற்பொழுது தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் பராமரிப்பில் இருப்பதாக அவ்வமைப்பின் பேச்சாளர் மையூறு விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கத்தின் மனைவியே மேற்படி சிறுவனை அதிகளவு அடித்துக் கொடுமைப் படுத்தியுள்ளதாகவும் இச்சிறுவனின் தந்தை ஒரு விவசாயி எனவும் தெரிவிக்கும் மையூறு விஜயரெத்தின தொழிலமைச்சு ஊடாக இராச மாணிக்கத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### -மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிராக-

# இ.தொ.கா. நுவரெலியாவில் இன்று மறியல் போராட்டம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியாவில் இன்று வீதிமறியல் போராட்டம் நடத்தவுள்ளது.

மேல் கொத்தமலையில் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சினால் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் நீர்மின்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இது தமது கட்சியின் முதல் கட்ட நடவடிக்கை என்று தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# வேலை வாய்ப்பின்மை

உயர் கல்வி பெற்றவர்கள் மத்தியிலே வேலையில்லாப் பிரச்சினை அதிகமாக இருப்பதாக தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித் திருக்கிறது.

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை மற்றும் உயர் கல்வி பெற்ற இளைஞர்கள் மத்தியில் வேலையில்லா நிலைமை சம்பந்தமாகச் சென்ற வருடம் இருந்த நிலமை 18.5 சதவீதமாகும். இருந்த போதிலும் சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் மத்தியில் வேலையில்லா வீதாசாரம் 8.2 சதவீதமாகும். அதேசமயம் ஏனைய இளைஞர்கள் மத்தியில் 13.5 சதவீதமாக வேலையில்லாப் பிரச்சினை காணப்பட்டதாகவும் தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## உள்ளூராட்சி...

போது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் அரசிடமும் தேர்தல் ஆணையாளரிடமும் இந்தக் கோரிக்கை விடுக்கப்படும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

25ஆம் திகதி வடக்குகிழக்கின் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அடுத்த ஆறுமாத காலத்துக்கு அரசு ஒத்திவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளிடம்...

பாட்டுக்கு போகும் நிலையில் இல்லை. அத்துடன் தேசிய அரசாங்கம் அமைக்கும் நிலையில் தான் இல்லை என்பதை அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பிரதமர் ரணில் விக்கரமசிங்க உடன்படிக்கை செய்வாராக இருந்தால் சனாதிபதி சார்ந்த கட்சி ஜே.வீ.பி. யுடன் ஏன் உடன்படிக்கை செய்யக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

## தற்போதைய...

விட்டுள்ளார். தற்போது அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலுள்ள ஒப்பந்தம் காரணமாக அவசர கால விதிகள் செயலிழந்துள்ளமையால் விடுதலைப் புலிகளின் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க தம்மால் முடியாதுள்ளதாக முப்படைத் தளபதிகளும் சந்திரிகா குமாரதுங்கவிற்கு அறிவித்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொங்கு தமிழ்...

ளேன். பல்கலைக்கழக மாணவர்களின் இவ் எழுச்சிப் போராட்டமானது வரவேற்கத்தக்கது. இந்த எழுச்சி நிகழ்வில் கலந்து கொள்வதை முஸ்லிம் மக்கள் தமது கடமையாக நினைத்துக் கலந்து கொள்ள உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

# கிராமம் கிராமமாக வீரமுரசு வார அரங்கு

(அலுவலக செய்தியாளர்)

வீரமுரசு வார அரங்கு மீண்டும் கிராமம் கிராமமாக கிராம மக்களை நோக்கிச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி முல்லை நகரில் முல்லை பிரதேச அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால் மேற்படி வீரமுரசு வார அரங்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

'பாடுவோர் பாடலாம்' உட்பட பல கலை நிகழ்வுகள், அரங்க நிகழ்வில் இடம்பெறவுள்ளதென கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# மோட்டார் சைக்கிளில் வந்தவர் வீதி விபத்தில் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் தலையில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பி.ப.05.15 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்திற்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

நிறுவனமொன்றில் பணிபுரிந்த பெண் ஊழியர்கள் கடைமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் வீதியில் அவர்களின் பின்புறமாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் பெண் ஊழியர்கள் பயணித்த துவிச்சக்கர வண்டியில் மோதுண்டு தடம் புரண்டதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் படுகாயங்களுக்குள்ளானார்.

துவிச்சக்கர வண்டியில் பயணித்த பெண் ஊழியர்கள் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

மோட்டார் சைக்கிள் கிளிநொச்சி காவல் பணிமனையினரின் பாதுகாப்பிலுள்ளதுடன் காவல் துறையினர் தொடர்ந்து விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

# சிறிலங்காப் பிரதமர் நேற்று பிரிட்டன் சென்றடைந்தார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை 2.00 மணியளவில் பிரிட்டனைச் சென்றடைந்துள்ளார்.

இவர் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் மற்றும் உள்நாட்டு அலுவல்கள்அமைச்சர் ஆகியோருடனும், பிரிட்டனின் நிதி அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

டோக்கியோ மாநாட்டின் மூலம் கிடைத்துள்ள உதவிகள் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பித்தல் போன்றவை தொடர்பாக இரு நாட்டுத் தலைவர்களிடையேயும் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

அமைச்சர்களான ஜீ. எல். பீரிஸ், டிரோன் பெர்னாண்டோ, மிலிந்த மொறகொட ஆகியோர் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கதிர்காமருக்குவழங்கப்பட்ட பாதுகாப்பு மேலும் அதிகரிப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருக்கும் சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமருக்கும் மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் சிலருக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படு கிறது.

# வைத்தியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்ற நடவடிக்கை

### அமைச்சர் கருஜெயசூரிய

வைத்தியர்களின் வேலை நிறுத்தத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து தீர்ப்பு வழங்கத் தயாரிக்கப்பட்ட சுற்றறிக்கை எதிர்வரும் புதன்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தச் சுற்றறிக்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் சம்பள முரண்பாடு உட்பட ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

வைத்தியர்கள் சகிதம் மல்வத்த மகாநாயக்கரைச் சந்தித்தபோது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சம்பள முரண்பாடு தொடர்பான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சுற்றறிக்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என வைத்தியர் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மல்வத்த பீடத் தேரரின் வேண்டுகோளுக்கு அமைய உடுகும்புற, நம்புக்கல பிரதேசத்தில் இலவச வைத்திய முகாம் தொடர்பாக அமைச்சர் உட்பட வைத்தியர்கள் தேரருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

# இடைக்கால நிர்வாகம் அமைக்கும் வரை டோக்கியோ நிதியைப் பயன்படுத்த முடியாது-

## ரணிலிடம் ஜப்பான் தூதுவர் வலியுறுத்து

வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாக சபையை அமைக்கும் வரை டோக்கியோவில் கிடைத்துள்ள நிதி உதவியைப் பயன்படுத்த முடியாது என ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் வழங்கப்பட்ட நிதியுதவி தொடர்பாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சிங்களவர் சிங்கள...

இலங்கைத் தீவில் தமிழர்கள் வந்தேறு குடிகள் எனவும், சிங்களவர்கள் ஆதிக்குடிகள் எனவும் கூறப்படுவதுடன் தமிழரின் வரலாற்று எச்சங்கள் ஏராளம் இருந்தும் சிங்களவர்களின் எச்சங்களும், வரலாறுகளுமே அரசினால் வெளியிடப்படும் புத்தகங்களில் காணப்படுகின்றன.

தமிழர்கள் இந்த நாட்டை ஆண்டுள்ளார்கள் என்பது திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார்.

## சமாதானம்...

2002 பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பதினாறு மாதங்களிலும் சிறிலங்கா அரசு சமாதானத்திற்கான செயற்பாடுகள் எதையும் செய்யாது உங்களின் பொறுமையைச் சீண்டிப்பார்ப்பதிலேயே குறியாக இருக்கின்றது.

□ நெடுந்தீவில் மூன்று கடற்புலிகள் வீரச்சாவடையக் காரணமான சம்பவமாக இருந்தாலென்ன,

□ காஞ்சிரங்குடாவில் ஏழு அப்பாவித் தமிழர் பலியாகக் காரணமான சம்பவமாக இருந்தாலென்ன,

□ திருமலையில் மூன்று பேர் சாவடையக் காரணமான சம்பவமாக இருந்தாலென்ன,

□ மானிப்பாயில் பெண் போராளிகள் மீது நடாத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான சம்பவமாக இருந்தாலென்ன,

□ எல்லாவற்றிற்கும் மேலாக கப்பல் கட்டன் சிலம்பரசன் உட்பட 11 போராளிகள் வந்த கப்பலை சர்வதேசக் கடலில் வைத்து அழித்த சம்பவமாக இருந்தாலென்ன,

□ ஏன் கடந்த 14ஆம் திகதி மீண்டும் சர்வதேசக் கடலில் வைத்து எமது கப்பலை அழித்து போராளிகளைக் கைது செய்த சம்பவமாக இருந்தாலென்ன எல்லாமே உங்களின் பொறுமையைச் சீண்டிப்பார்ப்பதாகவே உள்ளன.

எமது மக்களின் இதயங்களில் குடி கொண்டிருக்கும் எம்தலைவா இச்சம்பவங்களிற்குப் பின் சமாதானம் தொடர்பாகத் தாங்கள் எடுக்க இருக்கும் எந்த முடிவிற்கும் உங்களின் மக்களாகிய நாம் இதுவரை காலமும் உறுதுணையாகவும், பக்கபலமாகவும் நின்றது போல் தொடர்ந்தும் உங்களிற்குத் தோள் கொடுப்போம்என உறுதியாகஅறியத் தருகின்றோம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.